நகரத்தார் குரல்

91/1

(சமூக, இலக்கிய மாத இதழ்)



மண்ணுலகத் தவம் காட்ட வந்தாய் போற்றி!
மதுரையிலே மண்சுமந்து நின்றாய் போற்றி!
தண்ணளிசேர் கோமதித்தாயுடனே தோன்றும்
சங்கரலிங் கப்பெருமான் திருத்தாள் போற்றி!

பிப்ரவரி 1992

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11

ஒலி 1

பிரஜோத்
பத்தி

தை

பிப்ரவரி

1992

வேதம் ஓது வேலையோ வீணதாகும் பாரிலே.
காத காத தூரம் ஓடிக் காதல் பூசை வேணுமோ?
ஆதி நாதன் வெண்ணெயுண்ட அவனிருக்க நம்முளே
கோது பூசை வேதம் ஏது? குறித்துப் பாரும் உம்முளே.

— சிவ வாக்கியர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00

சிரிப்பு

''நிர்மலாவை நிம்மின்னு கூப்பிடுறே விமலாவை விம்மின்னு கூப்பிடுறே, மாலாவை எப்படிக் கூப்பிடுவே?''

''மம்மின்னு''

ஃ ஃ ஃ

''நடந்து போய்க்கிட்டிருந்த அந்த ஆள் ஏன் திடீர்னு ஓடத் தொடங்கிவிட்டான்?''

''வேகம் 20 கிலோ மீட்டர்'னு அறிவிப்புப் பலகை அங்கே இருக்கே, நீங்கள் பார்க்கலையா?''

ஃ ஃ ஃ

''அவரு பாங்கிலே வேலை பார்க்கிறார்'னு எப்படி அவ்வளவு சரியாகக் கண்டு பிடிச்சே?''

''தினமும் புதுப்புது ரூபாய் நோட்டா எடுத்துச் செலவு செய்கிறாரே, அது கூடவா தெரியலை....''

ஃ ஃ ஃ

"கள்ள நோட்டு அடிச்சுப் பணம் சேர்த்தானே கந்தசாமி, இப்ப அவன் என்ன செய்யறான்?''

''கள்ள ஓட்டுப்போட ஆள் தயார் பண்ணியே பணம் சேர்த்துக் கிட்டிருக்கிறான்!''

ஃ ஃ ஃ

''என்ன நீங்கரெண்டு பேரும் மொட்டை போட்டிருக்கீங்க?''

''நாங்கரெண்டு பேரும் ஒருவருக்கொருவர் பந்தயம் கட்டினோம். நாடாளுமன்றத் தேர்தலிலே அவரு சொன்ன ஆள் தோற்றுப் போயிட்டார், சட்டமன்றத் தேர்தலிலே நான் சொன்னவர் தோற்றுவிட்டார், அதுதான்....''

— குரல் பிரியன்

வயிரவன் கோவில் அர்த்த ஜாம பூஜை: ஓர் வேண்டுகோள்

நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்றான வயிரவன் கோவிலில் அர்த்த ஜாமக் கட்டளைக்கு 12-12-91 வரை 245 பேர் சேர்ந்திருப்பதாகவும் இன்னும் 120 பேர் தேவைப்படுவதாகவும் வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர்கள் செயலாளர், வயிரவன் கோவில் நகரத்தார் தர்ம பரிபாலன சபை, நகர வயிரவன்பட்டி, சிறுகூடல் பட்டி–623 215 பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்ற முகவரிக்கு தங்களுடைய பெயர், முகவரி, நட்சத்திரம் ஆகிய விவரங்களுடன் ரூ. 401/- வீதம் அனுப்பி தெய்வ காரியங்கள் சிறப்புற நிகழ உதவுமாறு வயிரவன் கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் தலைவர் கடியாபட்டி பி. கு. நா. கும. வயி. குமரப்ப செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

உச்சிக் கால பூஜைக்கும் அர்த்த ஜாம பூஜைக்கும் உபயம் செய்தவர்கள் அவர்களுக்கு உரிய நாட்களில் குடும்பத்துடன் வந்து சுவாமி தரிசனம் செய்து கொள்ளலாம் என்றும் நேரில் வர இயலாதவர்களுக்கு அஞ்சல் மூலம் பிரசாதம் அனுப்பிவைக்கப் பெறுமென்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடவுளைக் காண.... ஓர் விளக்கம்!

இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பார்த்து ''கடவுளைக் காட்டுங்கள்'' என்றார், சுவாமி விவேகானந்தர்.

உடனே ஒரு கிண்ணத்தில் பாலைக் கொண்டுவரச் சொல்லி ''இந்தப் பாலில் என்னென்ன இருக்கிறது?'' என்று கேட்டார், இராமகிருஷ்ணர்.

''தயிர், வெண்ணெய், நெய் மூன்றும் இதில் இருக்கின்றன'' என்றார் விவேகானந்தர்.

''மூன்றையும் இப்போதே காட்ட முடியுமா?'' எனக் கேட்டார், இராமகிருஷ்ணர்.

''அதெப்படி இப்போதே காட்ட முடியும்?'' என்றார் விவேகானந்தர்.

''பாலைக் காய்ச்சினால் தயிரும் தயிரைக் கடைந்தால் வெண்ணெய்யும் அதனை உருக்கினால் நெய்யும் எப்படிக் கிடைக்கிறதோ, அதே போல் பக்தி செலுத்தி அதன் பின்பு தவம் செய்து அதனால் ஞானம் வந்தால் கடவுளைக் காணலாம்'' என இராமகிருஷ்ணர் விளக்கமளித்தார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(கோவிலூரில் 28—12—91 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் பேசியபோது)

உங்கள் குரல்

நகரத்தார் இதழ்களில் ''நகரத்தார் குரல்'' முதலிடத்தை வகிக்கிறது. டிசம்' 91 இதழில் திரு. வி. என். சிடி. பற்றி நடிகர் பிரபு கூறியது உண்மையிலேயே ரசிக்கும்படி இருந்தது. வி. என். சிடி. அவர்கள் எழுதிவரும் ''எனது ஆலய அனுபவங்கள்'' தொடர் முத்தாக இருக்கிறது.

டாக்டர் என். என். கண்ணப்பன்
மதுரை

''நகரத்தார் குர'' லின் 120 ஆவது இதழில் செல்வி ஆர். பிரியாவின் பேட்டிக் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். அது போல் எல்லாத் துறைகளிலும் வளரும் நம் பிள்ளைகள், பெண்களைப் பற்றி எழுதினல் இதழ் சிறப்பாக இருக்கும். வேந்தன் பட்டி திரு. வி. முத்துராமனின் 'தமிழ் நாட்டில் மஞ்சு விரட்டு' கட்டுரை பயனுள்ள ஒன்று.

செந்தில் வ. குமரப்பன்
பலவான்குடி

திரு. வி. முத்துராமனின் 'மஞ்சு விரட்டு' கட்டுரையும் அவரது அதிசயமான அற்புதமான இரு படங்களும் மிகவும் ரசிக்கும்படி இருக்கின்றன. திரு. வி. என். சிடி. அவர்களின் ''எனது ஆலய அனுபவங்கள்'' தொடர் பல நல்ல செய்திகளைச் சொல்கிறது.

ராம. அழ. ராமன்
லாலாப்பேட்டை

சிறு குழந்தைப் பாடல்களுக்காக கவிஞர் திரு. செல்லகணபதியும் பழநியப்பா பிரதர்ஸ் நிறுவனமும் பரிசு பெற்றிருப்பது அறிந்து மகிழ்ச்சியும் மன நிறைவும் கொண்டோம். ஆசிரியர் வி. என். சிடி. அவர்கள் ''எனது ஆலய அனுபவங்கள்'' கட்டுரையை அருமையாகவும் விளக்கமாகவும் கொண்டு செல்கிருர்.

விசாலாட்சி பழநியப்பன்
ஓசூர்

''நகரத்தார் குர'' லைப் படிக்காவிட்டால் பித்துப் பிடித்தது போல் ஆகிவிடுகிறது. செய்திகளை நல்ல தமிழிலும் விரிவாகவும் வெளியிட்டு வருவது அதன் சிறப்பாகும். 'செய்திகள் வாசிப்பவர்' பகுதி, மிக அருமையான பகுதி. நகைச் சுவைப் பகுதிகளைச் சேர்த்துவிட்டால் ''நகரத்தார் குரல்'' இன்னும் சிறப்பாக ஒளி வீசும் என்பது என் கருத்து.

வீர. கண்ணப்பன்
திருச்சி.

நேரத்தின் அருமை பற்றி லேனா தமிழ்வாணன்!

நம் நாட்டில் கூட்டங்கள், விழாக்கள் நேரப்படி நடப்பதில்லை. நேரத்தின் அருமை தெரிந்து அதை ஒழுங்காகக் கடைப் பிடிக்க வேண்டும்.

ஒரு ஆண்டின் அருமை, தேர்வில் தோல்வியுற்ற மாணவனுக்குத்தான் தெரியும். 'ஒரு ஆண்டு வீணாகப் போய் விட்டதே' என அவன் அதை நினைத்து வருந்துவான்-அதுவும் உண்மையிலேயே நன்றாகப் படிக்கிற மாணவனாக இருந்தால் தான்.!

ஒரு மாதத்தின் அருமை கர்ப்பிணிப் பெண்ணுக்குத்தான் தெரியும். குழந்தை பிறக்க ஒரு மாதம் இருக்கிறபோது குழந்தை சுகமாகப் பிறக்க வேண்டுமென்று அவள படுகிற வேதனை, அவதி, சொல்லில் அடங்காது.

ஒரு நாளின் அருமை சாலையிலே வண்டி தள்ளி விற்பனை செய்கிறவன், கூலிக்காரனைக் கேட்டால் தெரியும். ஒரு நாள் பந்த் என்று சொன்னால் அவன் படுகிற பாடு, அவன் வயிற்றுப் பிழைப்புக்கு உலை வைக்கிற அந்த ஒரு நாள் பற்றி அவர்களுக்குத் தான் தெரியும்.

ஒரு மணி நேரத்தின் அருமை டாக்டரிடம் சென்றால்தான் தெரியும். 'ஒரு மணி நேரத்திற்கு முன்னால் அழைத்து வந்திருந்தால் உயிரைக் காப்பாற்றி இருக்கலாம்' என்பார்.

10 நிமிட அருமையைக் காதலன்-காதலியிடம் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். காதலன் அல்லது காதலியின் வருகையை எதிர்பார்த்து காதலி அல்லது காதலன் சொன்ன நேரத்திற்கு வராமல் 10 நிமிடங்கள் தாமதமாகி விட்டாலே அவர்களுக்குக் கணங்கள் ரணங்களாக இருக்கும்.

ஒரு நிமிட அருமை விபத்து நடக்கும்போது தெரியும். 'ஒரு நிமிடம் தாமதமாக வந்திருந்தால் அவன் விபத்திலிருந்து தப்பியிருக்கலாம்' என்பார்கள்.

முன்பெல்லாம் சாலையிலே ஒரு விபத்தென்றால் உதவி செய்ய நூறு பேர் ஓடோடி வருவார்கள்.



இன்றோ விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூட 'அப்போது நான் அங்கு இல்லை' என்று சொல்லி நழுவி விடுகின்றனர்.

ஆக நேரம் பொன்னானது; அதை ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டும்.

— லேனா தமிழ்வாணன்

(மதுரையில் 12–1–92 அன்று நடைபெற்ற அரிமா சங்கத்தின் 324-B 3 மண்டல மாநாட்டில் ஆற்றிய சிறப்புரையிலிருந்து)

ஏகபத்தினி விரதன்!

மிதிலை நகரத்தில் இராமர் வில்லை வளைத்து வேல்விழியாள் சீதையை மணக்கவிருந்த நேரத்தில் சீதையின் தந்தை ஜனகர், விசுவாமித்திரரைப் பார்த்தார்.

''என்ன மன்னவரே?'' என்றார் முனிவர்.

''இராமருக்குச் சீதையைக் கொடுப்பதில் ஒரு பிரச்னை உள்ளது...'' என்றார் ஜனகர்.

''பிரச்னையா? அப்படி என்ன?'' எனக் கேட்டார் முனிவர்.

''இராமரின் தந்தை தயரதச் சக்கரவர்த்திக்குப் பல மனைவியர்கள் உண்டு. அதுபோல தந்தையைப் பின்பற்றி இவருக்கும் பல மனைவியர்கள் எதிர்காலத்தில் அமைந்தால் என் மகள் சீதையின் நிலை என்னவது?'' என்று பெண்ணைப் பெற்ற தந்தையான ஜனகர், தன் நியாயமான கருத்தை வெளியிட்டார்.

உடனே முனிவர் ''எந்த வித யோசனையும் வேண்டாம். இராமர் பிறந்தது தயரதச் சக்கரவர்த்தி இல்லத்தில்... ஆனால் அவர் வளர்ந்தது எல்லாம் வசிஷ்டர் என்ற ஆசிரியர் வீட்டில். வசிஷ்டருக்கு ஒரு மனைவிதான். அதுபோல் வசிஷ்டரிடம் வளர்ந்த இராமரும் ஒரு மனைவியைத் தவிர வேறு பெண்ணைக் கண்ணெடுத்தும் பாரார். ஆதலால் உன் பெண்ணை தாராளமாகக் கொடு'' என விசுவாமித்திரர் கூறினார்.

அதன்படி இராமரும் இரு பெண்களைச் சிந்தையாலும் தொடாத ஏக பத்தினி விரதனாகவே வாழ்ந்தார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன


(தேவகோட்டையில் 17-12-91 அன்று நடைபெற்ற அருள்மிகு ரெங்கநாத சுவாமி ஆலய வைகுண்ட ஏகாதசி விழாவில்)

சிந்தனைப் பூங்காவில் சிந்தனை உரை


கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் சிந்தனைப் பூங்காவின் நான்காவது கூட்டம் 11-1-92 காலை இனிதே நிகழ்ந்தது. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினர்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் 'ஐந்தும் ஆறும்' என்பது பற்றிச் சிந்தனை உரை நிகழ்த்தினார்.

தேவகோட்டையில் முருகன் ரதம்

மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் உள்ள ஜெயமுருகன் கோவிலிலிருந்து ஆன்மீக சமாதான ரத யாத்திரை முருகன் ரதம் 7-1-92 அன்று தேவகோட்டை வந்தது. காசி ஸ்ரீ திரு. ஆர். வயிரவன் வீட்டில் வரவேற்று அபிஷேக ஆராதனைகள் செய்தனர்.



மதுரையில் 12-1-92 அன்று நிகழ்ந்த அரிமா சங்கத்தின் 324 B-3 மண்டல மாநாட்டில் சிறப்புரையாற்றிய ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணனுக்கு C மண்டலத்தின் தலைவர் திரு. உல. சுப. உலகப்பன் நினைவுப் பரிசு வழங்கும் இனிய காட்சி.



மேற்படி மாநாட்டில் C மண்டலத்தின் தலைவர் திரு. உல. சுப. உலகப்பன் பேசும் காட்சி. அருகே திருமதி பழநியப்பன், திருமதி கோபாலகிருஷ்ணராஜா, அரிமா 324 B-3 மாவட்ட ஆளுநர் திரு. என். ஏ. கே. கோபாலகிருஷ்ணராஜா, திருமதி கண்ணாத்தாள் உலகப்பன், திரு. லேனா தமிழ்வாணன் உள்ளனர்.

பாரதி - விநோபா தினச் சிந்தனைகள்

உடல் நலம் காப்போம்; உயிர் நலம் பெறுவோம்.

காலையில் ஐந்து மணிக்குள் எழுந்து உலகு அமைதியுறப் பிரார்த்திப்போம்.

நாள்தோறும் ஒருமணி நேரம் யோகப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி செய்வோம்.

சிறிது நேரமாவது புல்வெளியில், திறந்த வெளியில் நடை பயில்வோம்.

வீடுகளில் ஒன்றல்ல, பல மரங்களை நட்டு வளர்ப்போம்.

பப்பாளி, முருங்கை, இலச்சக் கட்டுக்கீரை, அத்தி, எலுமிச்சை பசளை, வாழை, பொன்னாம் காணீர், தூதுவளைஆகியவற்றை வீட்டில் பயிராக்குவோம்.

வேண்டுவோருக்கு இத்தகைய எளிய உயரிய பழ, பச்சிலை, விதை, கொடி, கடியல் (குச்சி) கொடுத்து மரம், செடி, கொடி பயிராக்க உதவுவோம்.

காலை வேளையில் அருகம் புல் சாறு அருந்துவோம்; காப்பி, தேநீரை மறுப்போம்.

பழங்களை காலையில் உணவாக உண்ணுவோம். (பழ + ஆகாரம் — பலகாரமல்ல)

காலை உணவு எளிதில் ஜீரணிக்கும் வண்ணம் நீர்த்த உணவாக இருக்குமாறு செய்வோம்.

நமது ஆடை, வீடு, தொழிலகத்தில் துப்புரவு காப்போம்; தூய்மைக்கும் முதலிடம் கொடுப்போம்.

வண்டி, வாகனாதிகள் பெருகி வரும் இக்காலத்தில் அவசியமானால் மட்டும் தனி வாகனங்களைப் பயன்படுத்துவோம்.

நமது வாகனங்களில் மக்களுக்குப் பீதி தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஒலி எழுப்பும் கருவிகளை (Air Horn) அகற்றுவோம்.

ஆடைகள் பருத்தி ஆடைகளாக இருக்குமாறு செய்வோம். (கதர் ஆடை அது காந்தி ஆடை. அது வேலை வாய்ப்பு அளிக்கும் ஆடை.)

உள்ளூர் உற்பத்தி, கிராம உற்பத்திக்கு முதலிடம் கொடுப்போம்.

சாலைகளைக் கோவில்களைப் போலப் பேணுவோம். சாலைகளில் ஆபாசம் செய்யும் மோசமான பழக்கத்தை அகற்றுவோம்.

தாய்மொழியில் பேசுவோம்; எழுதுவோம்; தாய்மொழி காப்போம்.

எல்லா மக்களும் நிறைவெய்தி வாழ நமது சக்திகளைப் பயன்படுத்துவோம்.

நமது தேவைகளை ஒரு அளவுக்குள் கட்டுப்படுத்துவோம்.

நோய்க்கு மருந்து உபவாசம்; அவ்வப்போது உபவாசமிருந்து பழகுவோம்.

சாந்தி மந்திரம் சொல்வோம்; தியானம் செய்வோம்.

வாழ்க வளம் பெற என்று அனைவரையும் வாழ்த்துவோம். வாழ்க !


நன்றி : வேந்தன்பட்டி இயற்கைக் கழக வெளியீடு.

எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

— 8 —

இதுவரை எவருக்கும் கிடைக்காத பெரும் பாக்கியம் பெரியவர் எல். அழகுசுந்தரம் செட்டியார் அவர்களுக்குக் கிடைத்தது. காஞ்சிப் பெரியவர் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அழகுசுந்தரம் செட்டியார் அவர்களிடம் காஞ்சி அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலின் குடநீராட்டு யாகசாலை நிர்மாணப் பணியை ஒப்படைத்தார். அப்பணியை ஏற்றுக்கொண்ட அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் என்னை அவர்களது உதவியாளராக ஏற்றுக்கொண்டு, காஞ்சிக்குப் புறப்படுவதற்கு முன்பு என்



இராங்கியத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களும் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும்.

வீட்டிற்கு வருகை தந்து, என் துணைவியாரிடம் ''என்னம்மா உன் கணவரை என் பொறுப்பில் நான் வைத்துக் கொள்ளட்டுமா?'' என அவருக்கே உரித்தான நகைச்சுவையுடன் கேட்டார். ''அதற்கென்ன, தாராளமாக நீங்களே உதவியாளராக வைத்துக் கொள்ளுங்கள்'' என என் மனைவி சொன்னாள். பின் என்னைப் பார்த்து ''சிதம்பரம் நீங்கள் என்னைவிட்டு எங்கும் போய்விடக்கூடாது. நீங்கள் என் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்க வேண்டும்'' எனக் கூறினார். அதன்பிறகு இருவரும் காஞ்சியை அடைந்தோம். காஞ்சிப் பெரியவர் அழகுசுந்தரம் செட்டியாரைப் பார்த்து ''வாருங்கள் மதுரைத் தலைவரே!'' எனச் செல்லமாக அழைத்தார். இன்றும் அந்தச் சொற்கள் என் செவிகளிலே ஒலித்த வண்ணமாக இருக்கிறது. மதுரைப் பெரியவர் அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோவிலின் குடநீராட்டு யாகசாலையின் பொறுப்பாளராகப் பொறுப்பேற்று அப்பணியை சிறப்புறச் செய்து முடித்தார். அவருக்கு உதவியாளராக இருந்து பணியாற்றியதை நான் பெரும் பேருகக் கருதுகிறேன். மீண்டும் அந்தக் கோவிலுக்குக் குட நீராட்டு நடைபெற இருக்கிறது. காஞ்சிப் பெரியவர் மீண்டும் அந்தப் பொறுப்பை நகரத்தாரிடம் ஒப்படைத்திருக்கிருர்.

பாராட்டுக் கூட்டம்

அறங்காவலர் குழுத் தலைவராகப் பொறுப்பேற்ற எனக்கு மதுரை நகரத்தார் சங்கம் சார்பில் அதன் தலைவராகத் திகழ்ந்த பெரியவர் எல். அழகுசுந்தரம் செட்டியார் அவர்களின் சீரிய தலைமையில் பாராட்டு விழா நடந்தது. அக்கூட்டத்தில் சான்றோர்கள் பலர் கலந்து கொண்டு என்னை வாழ்த்திப் பாராட்டினர். தலைமை வகித்த பெரியவர் அழகு சுந்தரம் செட்டியார் அவர்கள் தனது உடன்பிறந்த தம்பி லெ. நாராயணன் செட்டியார் அவர்களை வாழ்த்திப் பேச அழைக்க வேண்டியிருந்தது. அந்நிலையில் தலைவர் அவர்கள் கூட்டத்தைப் பார்த்து ''நாராயணன் செட்டியார் அவர்களே! என்று அழைக்கவா? அல்லது நாராயணன் என்று அழைக்கவா?'' என்று தமாஷாகக் கேட்டுவிட்டு, ''நாராயணன் செட்டியார் அவர்களை வாழ்த்த அழைக்கிறேன்'' எனக் கூறியதும் சபை சிரிப்பலையில் மூழ்கியது.

இப்படித் தொடர்ந்து பாராட்டு விழாக்கள் பல்வேறு நகரங்களில் நடந்த வண்ணமாக இருந்தன. குறிப்பாக முதல் கூட்டம் குருவிக்கொண்டான் பட்டியில் புதுக்கோட்டை இளவரசர் விஜயரகுநாதத் தொண்டைமான் எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பனையப்பட்டி, ஆவினிப்பட்டி, ஆகிய ஊர்களில் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடந்தது. கோவையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலும் மிதிலைப் பட்டியில் டாக்டர் சுப. அண்ணமலை தலைமையிலும் இத்தனைக்கும் மேலாக முத்திரை பதியும் வண்ணம் சென்னை மாநகரில் பாராட்டு விழா நடந்தது. இக் கூட்டத்தில் கவியரசு கண்ணதாசன், சிலம்புச் செல்வர் ம.

பொ. சி., அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீ., செட்டி நாட்டு அரசர் இராஜா சர் முத்தையா செட்டியார் ஆகியோர் என்னை வாழ்த்திப் பேசினர். இத்தனைப் பாராட்டுக் கூட்டம் நடந்திருப்பினும் என் மனதை நெருட வைத்த கூட்டம் எனது சொந்த ஊரான இராங்கியத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டம் தான் எனச் சொன்னால் அது மிகையாகாது. இக்கூட்டத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரரும், மூதறிஞர் இராஜாஜியின் ஆத்ம நண்பருமான கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர் தலைமை உரை ஆற்றுகையில் என்னை நோக்கி ''சிதம்பரம் இது பதவி அல்ல; உன்னிடத்தில் மிகப் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது. நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அஜாக்கிரதையாக இருந்தால் பல தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆன்மீகப் பணி ஈடு இணையற்றது; மகத்தானது'' என எச்சரிக்கையுடன் கூடிய பாராட்டுரையாற்றினார்.

எனக்கு, பல்வேறு நகரங்களில் ஊர்களில் பாராட்டுக் கூட்டங்கள் நடந்திருப்பினும் இப்பாராட்டுக் கூட்டம்தான் என் உள்ளத்தில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியது. கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் உரையைக் கேட்டதற்குப் பின்னால் தான் 'எனக்கு பதவி கிடைக்கவில்லை. பொறுப்புக் கிடைத்திருக்கிறது' என்பதை உணர்ந்தேன். அந்த உணர்வோடு நான் பணியாற்றத் தொடங்கினேன்.

பாராட்டுக் கிடைத்தபோதெல்லாம் மகிழ்ந்த நான் சா. க. வின் பேச்சுக்குப்பின் பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்படத் தொடங்கினேன்

தொடரும்

கதம்பம்

ஃ தமிழ் நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் பலகாரம் என்பதே இல்லை. பழைய சோறு என்று கூறப்படும் கஞ்சி அல்லது கூழ்தான். அதை அவர்கள் ''பசி ஆறினேன்'' அல்லது ''பசி ஆறிவிட்டு வருகிறேன்'' என்று தான் கூறுவார்கள்.

ஃ 'மூங்கில்' என்பதைப் பல ஊர்களில், நகரங்களில் 'கழசு' அல்லது 'சேலங்கட்டி' எனக் கூறுவார்கள்.

ஃ இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய இரு மாவட்டங்களில்தான் 'வேலிக் கருவை' என்கிற தாவரம் பெருமளவில் இருக்கிறது. விறகுப் பஞ்சம் ஏற்படாமல் இது தான் காப்பாற்றி வருகின்றது.

ஃ வயிற்றுக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளுக்குச் சிகிச்சை பெற வரும் மக்களைக் கணக்கிட்டால் அவர்களில் புலால் உணவு உட்கொண்டவர்களே மிக அதிகமாக இருப்பார்கள் என தொழிலதிபர் ஒருவர் கூறினார்.

ஃ முதல் நாள் தோல் உறித்த வெங்காயத்தை மறுநாள் சமையலுக்குப் பயன்படுத்துவதாலும் ஒரு முறை தயாரித்த காபி அல்லது தேநீரை மீண்டும் சுடவைத்துச் சாப்பிடுவதாலும் கெடுதல் எனப் பலர் கூறுகிறார்கள். அவற்றால் என்ன தீமை என்பதை மருத்துவர்கள் மக்களுக்கு விளக்க வேண்டும்.

ஃ அப்பாவைப் பெற்ற அப்பாவை அப்பப்பா என்றும் அம்மாவைப் பெற்ற அம்மாவை அம்மம்மா என்றும் இலங்கை வானொலி அழகிய தமிழில் குறிப்பிடுகிறது. நம் குழந்தைகளோ டாடி, மம்மி, அங்கிள், ஆன்ட்டி என்று கூறுகிறார்கள்.

ஃ தமது வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர்களுக்கு கிராமத்துவாசிகள் பணம் தவிர தேங்காய், பழம், காய்கறி என்று முனமுவந்து அன்பளிப்பாக வழங்கிய காலமும் உண்டு.

ஃ மின்சாரம் தயாரித்து விநியோகம் செய்யும் பொறுப்பை 50 ஆண்டுகளுக்கு முன் தனியார் துறை ஏற்றுச் செல்வனே நடத்தியது. அதுபோல மீண்டும் அப் பொறுப்பைத் தனியார் வசம் ஒப்

படைத்தால் நல்லது என பல தொழிலதிபர்கள் கருதுகிறார்கள்.

ஃ பாம்புகள் தண்ணீர், கல் இடுக்குகள் பூமி, இடுக்குகள் தவிர எலிப்பொந்துகள், கரையான் புற்றுகளில் வாழ்கின்றன. கரையான் புற்றுகளில் பாம்புகள் இருக்கப் போய் அது பாம்புப் புற்றாகிவிட்டது.

ஃ ஆறுமுகம், சுந்தரம், சிந்தாமணி, ராஜாமணி போன்ற பல பெயர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சூட்டப்பட்டுள்ளன.

ஃ மங்கள காரியங்களுக்கு நம்மவர்கள் பலசரக்குச் சாமான் சிட்டை எழுதும்போது முதன் முதலாக 'மஞ்சள்' என்று எழுதுவது வழக்கம்.

ஃ நம்மினத்தில் அடையாளப் பெயர்களுக்குப் பஞ்சமில்லை. சிலரது அடையாளப் பெயர்கள் விநோதமாக இருக்கும். ஒரு ஆச்சி வக்கீல் போல ஆணித்தரமாகப் பேசுவார்களாம். அதைப் பார்த்தவர்கள் அவர்களுக்கு 'வக்கீல் ராமாயி ஆச்சி' எனப் பெயர் சூட்டினார்களாம். அது நிலைத்தும் விட்டது. அழுக்கு வேட்டி கட்டினாலும் சரி சலவை வேட்டிகட்டினாலும் சரி அதற்கும் பெயர் வைத்து விடுவதில் வல்லவர்கள் நம்மவர்கள்.

ஃ மனித இனம், விலங்குகள், ஊர்வன, பறப்பன என்று மட்டும் இல்லை பெருக்குமாறுகளில் கூட ஆண்மாறு பெண்மாறு என்று இருக்கிறது.

ஃ கண்ட கண்ட ஊர்களில் கண்ட கண்ட தண்ணீரை அருந்தினால் உடல் நலம் பாதிக்கும் என்பது பலரும் அறிந்த உண்மை. ஆனால் எல்லோராலும் உடலை நன்றாக வைத்துக்கொள்ள வாய்ப்பு, வசதி ஏற்படவில்லை.

ஃ ஆடு, கோழி, முயல், வான்கோழி, புறா, வெளவால், மீன், நண்டு எனக் கறி சமைத்து உண்போர் ஏராளம். அப்படிப்பட்டவர்கள் மயிலை மட்டும் தவிர்த்து விட வேண்டும். காரணம் அது முருகப்பெருமானுக்கு வாகனம் மட்டுமல்ல; நம் நாட்டின் தேசியப் பறவையும் கூட!

ஃ அந்தக் காலத்தவர்கள், அதிகம் படிக்காதவர்கள் நீதிமன்

றத்தில் கூறப்படும் 'Hearing' என்ற ஆங்கிலச் சொல்லை 'ஈரங்கி' என்று தமிழில் குறிப்பிடுவார்கள்.

ஃ செட்டி நாட்டில் தெற்கு வட்டகையில் காளையார்மங்கலத்தைச் சேர்ந்த நம்மவர்களில் பெரும் பான்மையினர் பேராசிரியர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருகிறார்கள்.

ஃ நம்மில் அதிகம் படிக்காத ஆச்சிமார்கள் இரயிலடி, காரடி, தேரடி என்று கூறுவதுபோல் 'ஐந்து விளக்கு' என்பதை 'அஞ்சு லாம்பு' என்பார்கள்.

ஃ 'ஆசிரியர்' என்றால் ஆண் பாலையும் 'டீச்சர்' என்றால் பெண் பாலையும் குறிப்பதாக பல பள்ளிச் சிறார்கள் எண்ணி அதுபோல் குறிப்பிட்டும் வருகிறார்கள்.

ஃ வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஊரை திருப்பத்தூர் எனவும் பசும்பொன் மாவட்டத்தில் உள்ள ஊரை திருப்புத்தூர் எனவும் குறிப்பிட வேண்டுமென எனது நண்பர் ஒருவர் கூறுவார்.

ஃ கிடாய்க்கறி சீக்கிரம் வேகும்; ஆட்டுக்கறி சீக்கிரம் வேகாது என வீடுகளில் சொல்வார்கள். கிடாய் என்றால் செம்மறி ஆட்டையும் ஆடு என்றால் வெள்ளாட்டையும் குறிக்கும்.

ஃ குப்பைகளைக் கூட்டி பக்கத்து வீட்டருகே ஒதுக்கினால் சண்டை சச்சரவுகள் வரும் என்பதற்காகப் பல நகரங்களில், பல தெருக்களில் சாலையின் நடுவே அவற்றைக் குமித்து வைத்து விடுகிறார்கள்.

ஃ நகரப் பேருந்துகளுக்காக நிற்பவர்கள் சில சமயங்களில் நிற்க முடியாமல் அதன் அருகேயுள்ள வீடுகளின் வாசற்படிகளில் அமர்ந்து விடுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் அமர்ந்து விடாதிருக்க சில புண்ணியவதிகள் தண்ணீரைத் தெளித்து அல்லது ஊற்றிவிடுவதை இந்நாட்களில் எங்கும் பரவலாகக் காணலாம்.

— எல். சுந்தரம்

உ சிவமயம்

வட இந்திய காசி யாத்திரை

மகா சிவராத்திரி ஸ்பெஷல் 27-2-92 முதல் 15 நாட்கள்

காசி – சாரநாத் - அலகாபாத் (திரிவேணி) கயா - புத்த கயா- டெல்லி ஹரித்துவார் – ரிஷிகேஷ் - ஆக்ரா - மதுரா - பிருந்தாவனம். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மாசி மீ 15உ 27–2–92 வியாழக்கிழமை புறப்படுகிறது. III டயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம், சாப்பாடு, ஊர் சுற்றிப்பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 1940/-

---

மகா சிவராத்திரி ஸ்பெஷல் 27-2-92 முதல் 20 நாட்கள்

பண்டரிபுரம் – பம்பாய் - டெல்லி - ஹரித்துவார் – ரிஷிகேஷ் – ஆக்ரா - மதுரா - பிருந்தாவனம் - காசி - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) IIIடயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம், சாப்பாடு ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2750/-

நபர் 1க்கு ரூ. 750 - வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்யவும்.

இதே யாத்திரை மார்ச் மாதம் 18உ (18-3-92) புறப்படுகிறது

சபரிமலைப் பயணம்

மாசி மாதப் பிறப்பு தெரிசனம் 13-2-92 & 14-2-92 2நாள்

மதுரை – குற்றாலம் – ஆரியங்காவு – பம்பை – சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.

நாள் 2க்கு பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 200/-

பங்குனி மாதப் பிறப்பு தெரிசனம்
14 – 3 92 & 15 – 3 – 92 (2 நாட்கள்)

பங்குனி உத்திர தெரிசனம்
17 – 3 – 92 & 18 – 3 – 92 (2 நாட்கள்)

சித்திரை விஷு தெரிசனம்
11 – 4 92 & 12 – 4 – 92 (2 நாட்கள்)

சித்திரை விஷு தெரிசனம்
12 – 4 – 92 to 14 – 4 – 92 (3 நாட்கள்)

சித்திரை விஷு தெரிசனம்
13 4 – 92 & 14 – 4 – 92 (2 நாட்கள்)

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

9, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1. 31168

பாத்தோட்டம் கண்ணதாசன்

- மகரம் -



எதையெதையோ கவிதையென்றே எழுதுகின்ற அவலநிலை
புதியதொரு திருப்பமெனப் புவியினிலே அலைகிறது
கதியற்றுக் கவியுலகம் கரைகாண முடியாமல்
விதிவழியே அலைபாய்ந்து வெற்றிடத்தில் மிதக்கிறது!

இலக்கியத்தின் அருஞ்சுவையை இதயத்தில் பதியுமாறு
கலையுலகில் உலவவிட்ட கவித்தென்றல் கண்ணதாசன்!
நிலையற்ற வாழ்க்கையிலே நிலைக்கின்ற தத்துவத்தை
மலைக்கவைக்கும் முறையினிலே மாத்தமிழில் வடித்துவிட்டான்!

ஓடுகின்ற மேகங்கள் உருவாக்கும் ராகங்கள்
தேடுகின்ற உருவத்தை தேசத்தில் காணவில்லை!
நீடுதுயில் கொண்டவனை நித்தமுந்தான் தேடுதடா!
பாடுபொருள் ஆகிவிட்டான்! பாவினங்கள் வாடுதடா!

இந்தியாவின் அருவிகளோ இவன்வரியை இசையாக்கித்
தந்ததையே செவிமடுத்து தனைமறந்த பெருங்கவிஞன்
விந்தையென விளக்குகின்ற வெள்ளருவி நயாகராவில்
செந்தமிழின் கவியலையைச் சீராட்ட நினைத்தானோ?

சீராட்ட நினைத்தவனைச் சிங்கார நயாகராவும்
பாராட்டி வாழ்த்தொலியைப் பரப்புதடா இன்றளவும்
வேரோடி விழுதுவிட்ட விளைதமிழின் கவியரசன்
தேரோட்டம் நின்றதாலே தேம்புதடா தமிழினமே!

முக்கல்கள் முனகல்கள் முறையற்ற ஒலிக்குறிப்பு
திக்கெட்டும் முரசுகொட்டித் திரையுலகைக் கலக்குதடா!

திக்கற்று வகையற்று திசைமாறித் தடுமாறி
கொக்கரிப்பும் பாடலென்றே கொண்டாட்டம் போடுதடா!

நேற்றுவரும் இன்றுவரும் நினைத்தவுடன் பாட்டுவரும்!
ஊற்றெடுத்து வந்தாலும் உள்ளத்தில் நிலைக்காது!
காற்றினிலே சருகாக கணப்பொழுதில் பறந்துவிடும்!
ஆற்றலற்ற அடித்தளங்கள் ஆடியேதான் சரிந்துவிடும்!

கவியுலகக் கொடைவள்ளல்! கலையுலகக் கவியரசன்!
அவனியிலே அவன்கவிதை அரங்கேற்றம் போதுமென்று
சுவைக்கவிதைச் சுனைதன்னை சொந்தமாக்கி விண்ணுலகம்
சுவைப்பதற்கே இங்கிருந்து சொல்லாமல் கடத்தியதோ?

எண்ணற்ற பூந்தோட்டம் எங்கெங்கோ இருந்தாலும்
இணையற்ற பாத்தோட்டம் கண்ணதாசன் போல்வருமா?
தண்டமிழின் கவியரசைக் காலனேநீ மறைந்திருந்து
தயங்காமல் பிடித்துவிட்டாய்! புவிமக்கள் ஏங்குகிறோம்!

மண்ணகத்தின் விலைமதிக்க முடியாத வைரத்தை
மண்மூடிப் புதைத்தாயே! மனங்குமுற சிதைத்தாயே!
பண்பட்ட பாத்தோட்ட மேனிதன்னை அழித்தாயே!
பைந்தமிழோ உள்ளவரை கண்ணதாசன் காவியமே!

திருக்குறளில் நம் "நகரத்தார் குரல்"

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் – 97

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். – 92

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு – 1

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். – 167

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் – 850

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. – 247

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை. – 449

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். – 121

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. – 241

தொகுப்பு : வ. செந்தில், பலவான்குடி

நகர விடுதிக் கட்டிட நிதிக்கு பரிசுகள்

மதுரை நகர விடுதியின் புதிய கட்டிடம் மிக விரைவாகவும் கலையழகு மிக்கதாகவும் கட்டப்பெற்று வருகிறது. சமூகப் பணிக்கும் சமுதாயப் பணிக்கும் இயல்பாகவே நன்கொடை வழங்கும் நகரத்தார் பெருமக்கள் பலர் இந்தத் திருப்பணிக்கும் சிறந்த முறையில் நன் கொடைகள் அளித்திருக்கிருர்கள். இப்பணியில் நகரத்தார் அனை வருடைய பங்கும் இருக்க வேண்டு மென்பதால் ரூ. 1000, ரூ. 500, ரூ. 250, ரூ. 100. என்று நான்கு வகையான கட்டிட நன் கொடைப் பெறுகைச் சீட்டுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. இந்தச் சீட்டுக்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு கீழ்க்கண்ட வாறு சிறப்பான பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

1. ரூ. 1000/– சீட்டுக்கு ...... வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி
2. ரூ. 500/– ,, ... 16 லிட்டர் கொள்ளளவுடைய குளிர் சாதனப் பெட்டி
3. ரூ. 250/– ,, ... சலவை எந்திரம் (Washer only)
4. ரூ. 100/– ,, ... முதல் பரிசு .... மிக்ஸி
   இரண்டாவது பரிசு .... மின்விசிறி (Ceiling Fan)
   மூன்ருவது பரிசு ...... பிரஷர் குக்கர்

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் மதுரை, 16–வடக்குச் சித்திரை வீதி, சரவண லாட்ஜ் அறை எண் 3ல் இயங்கிவரும் நகரத் தார் சங்க அலுவலகத்தில் ரொக்கம் அல்லது பாங்க் டிராப்ட் கொடுத்து வளர்ச்சிப் பணியில் பங்கு பெற்று பரிசுக்குரிய பெறுகைச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள சங்கத்தின் செயலாளர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரமும் திரு. எம். சிஎன். மாணிக்கமும் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

ஸ்ரீ சோணையன் கோவில் குட நீராட்டு விழா

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் நெற்குப்பை சேகரத் தில் உள்ள ஸ்ரீ சோணையன் கோவிலின் குட நீராட்டு விழா 10-2-92 (தை மீ 27 ௳) திங்கட் கிழமை காலை 9-15 மணி முதல் 9–45 மணிக்குள் நடைபெற உள் ளது. 7–2–92 முதல் 10-2-92 காலை வரை ஆறு காலம் யாக சாலைப் பூஜைகள் நடைபெற உள்ளன. 9-2-92 ஞாயிறு மதி யம் முதல் 10-2-92 மதியம் வரை நகர விருந்து நடைபெற உள்ளது.

இக்குட நீராட்டு விழாவை முன்னிட்டு 9-2-92 ஞாயிறு மாலை 6-30 மணி அளவில் கவி யரசு கண்ணதாசன் பற்றி மூனை வர் திரு. தமிழண்ணல் தலைமை யில் பட்டிமன்றம் நிகழவிருக் கிறது. இதில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன், கவிஞர் திரு. சோம. சிவப்பிரகாசம், திருமதி சி. எஸ். விசாலாட்சி, திருமதி உமையாள் முத்து திரு. நா. சுப்பிரமணியன், முனைவர் திரு. கரு. முத்தையா ஆகியோர் பங்கு பெறுகின்றனர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ ''உங்கள் உடல் நலம்'' இதழின் ஆசிரியர் திரு. கே. ஆர். சுந்தரம் ''நமக்குத் துணை நாமே'' என்ற தலைப்பில் மதுரை வானொலியில் 1—2—92 அன்று காலையில் உரை நிகழ்த்தினார்.

ஃ நாட்டரசன்கோட்டை, பாகனேரி ஆகிய ஊர்களில் 21-1-92 செவ்வாய்க்கிழமையன்று செவ்வாய்ப் பொங்கல் விழாச் சிறப்பாக நடைபெற்றது.

ஃ மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியின் பேராசிரியை திருமதி கவிதாராணி, மதுரை வானொலியில் 24-2-92 திங்கள் மாலை 6-10 மணிக்கு நிகழவுள்ள 'தாய்வீடு' பகுதியில் 'பெண்கள் நல வாழ்விற்கு ஊறு பெண்களே' என்ற தலைப்பில் பேசவிருக்கிறார்.

ஃ காரைக்குடியில் 17, 18 & 19-3-92 ஆகிய மூன்று தினங்களும் நாட்டரசன்கோட்டையில் 20-3-92 அன்றும் கம்பன் திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது.

ஃ கோவில்பட்டி கன்னி விநாயகர் திருக்கோவிலின் திருவாதிரை விழாவில் (5—1—92 அன்று) 'விநாயகர் பெருமை' என்ற தலைப்பில் பேராசிரியை முனைவர் இராம. சௌந்தரவல்லி உரையாற்றினார்.

ஃ சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம், பிரபல தொழிலதிபரும் ஸ்பிக் நிறுவனத் துணைத் தலைவருமான திரு. எ. சி. முத்தையாவுக்கு 17—2—92 அன்று நடைபெறவுள்ள பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்துள்ளது.

ஃ மதுரையில் 1—1—92 அன்று நிகழ்ந்த நகரத்தார் பக்தி நெறி மன்றத்தின் மூன்றும் ஆண்டு நிறைவு விழாவில் வலையபட்டி திரு. பிஎல். கே. குப்பான் செட்டியார் அவர்களுக்கு பாகனேரி திரு. இராம. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்கள் 'திருப்பணிச் செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கினார்கள்.

ஃ நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோவிலில் 12-1-92 & 13-1-92 ஆகிய இரு தினங்கள் முனைவர் திருமதி இராம. சௌந்தரவல்லி ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஃ இலங்கை, கொழும்பு மாநகர் பம்பலப்பிட்டியாவில் தொன்று தொட்டு 'உபய கதிர்காமம்' என வர்ணிக்கப்படும் நகரத்தாரின் புதிய கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் உள்ள தெய்வங்களுக்குப் புதிய கோவில்கள் நிர்மாணித்து சுவாமிகளை

ஆரோகணம் செய்து தை மீ 26உ (9-2-92) ஞாயிறன்று காலை 8-43 மணி முதல் 10-14 மணிக்குள் குட நீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளது.

ஃ தமிழ் நாட்டின் தலை சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்களில் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பனும் ஒருவர் என 2-1-92 தேதியிட்ட ''கல்கண்டு'' இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஃ காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் 13-1-92 அன்று திரு. எம். முத்துப்பழநியப்பன் தலைமையில் நிகழ்ந்த சுழற்குழுக் கூட்டத்தில் படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா ''வா வா வசந்தமே'' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோவிலில் 19-1-92 & 20-1-92 ஆகிய இரு தினங்களும் தைப் பூசத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஃ ஒவ்வொரு தமிழ் மாதமும் கார்த்திகை நாளன்று மாலை 6-00 மணி அளவில் நகரத்தார் சங்கக் கட்டிடத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும் என திருச்சி நகரத்தார் சங்கம் அறிவித்துள்ளது.

ஃ சேலத்தில் 12-12-91 அன்று நடைபெற்ற பிள்ளையார் நோன்பு விழாவில் மாவட்ட நீதிபதி திரு. எம். சொக்கலிங்கம் நகரத்தாரின் சிறப்புப் பற்றியும் பக்தி பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.


ஃ கவிஞர் திரு. சேது. அருணசலம் மற்றும் கவிஞர்கள் பங்கு பெறும் பட்டி மண்டப நிகழ்ச்சியை 23-2-92 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு மதுரை வானொலியில் கேட்கலாம்.

ஃ தேவகோட்டை வள்ளுவர் மன்றம் சார்பாக ஜெயங்கொண்ட விநாயகர் கோவிலில் 11—1—92 அன்று கவிஞர் சேது. அருணசலம் ''திருவள்ளுவரும் கண்ணதாசனும்'' என்னும் தலைப்பில் உரையாற்றினர்.

ஃ காந்தி ஜெயந்தியின் 123 ஆவது வெளியீடாக ''காந்திய நெறிகள்'' என்ற கையடக்க நூலை திரு. அ. வல்லநாட்டான் வெளியிட்டுள்ளார்.

ஃ கண்டனூர் அருள்மிகு செல்லாயி அம்மன் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா தை மீ 26 உ (9-2-92) ஞாயிறு காலை 7-30 மணி முதல் 8-00 மணி அளவிலும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா அன்று காலை 8-00 மணிக்கு மேல் 8-50 மணி அளவிலும் நடைபெற உள்ளன. அவைகளுக்கு 6-2-92 முதல் யாக சாலைப் பூஜைகள் நடைபெற உள்ளன.

ஃ 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் திருவிழா கும்பகோணத்தில் 18-2-92 (மாசி மீ 6 உ) செவ்வாயன்று நிகழவிருக்கிறது.



'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பனுக்கு 23-11-91 அன்று காரைக்குடியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் சார்ஜா தமிழர் நற்பணிக் கழகத் தலைவர் திரு. அரு. சிவா பொன்னாடை அணிவிக்கும் காட்சி.

வியப்பூட்டும் உண்மைகள்!

- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு ''நார்வே''.
- ஜப்பானின் மான்செஸ்டர் ''ஒசாகா'' ஆகும்.
- சூரியன் உதயமாகும் நாடு ''ஜப்பான்''.
- மதுரை ''கோவில் நகரம்'' என்றும் அழைக்கப்படுகிறது.
- சிகாகோ 'பூங்கா நகரம்' என்று அழைக்கப்படுகிறது.
- தகடாக்க முடியாத உலோகம் ''பாதரசம்''
- பெட்ரோல் ''திரவ தங்கம்'' என்றும் அழைக்கப்படுகிறது.
- தேசிய கீதம் பாடுவதற்குரிய நேரம் ''52 நொடி''

— வி. ஆர். சின்ன அருணசலம்,
தேவகோட்டை.

உபதேச தினம்

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளை குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம். அதே போல் நகரத்தார் ஆண்களுக்கு உபதேசம் செய்து வைக்கும் கலாமடம்-பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளின் பிறந்த நாளை நகரத்தார்கள் 'உபதேச தின'மாகக் கொண்டாட வேண்டும்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(பாதரக்குடியில் 26—12—91 அன்று நடைபெற்ற தவத்திரு இரவீந்திர சுவாமிகளின் ஜெயந்தி விழாவில்)

சுப. மு. பழநியப்பன் இயற்கை எய்தினார்

அன்பிலும் பண்பிலும் சிறந்தவரும் தெய்வபக்தி மிக்கவரும் தமிழில் ஆர்வமுள்ளவரும் சிறு தொழிலதிபரும் ஆ. தெக்கூரைச் சேர்ந்தவருமான திரு. சுப. மு. பழநியப்ப செட்டியார் அவர்கள் தமது 53 வயதில் 22–1–92 புதன் கிழமை காலையில் சென்னையில் மாரடைப்பால் இயற்கை எய்தினார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது உடல் 23–1–92 அன்று சென்னை திருவொற்றியூரில் எரியூட்டப்பட்டது.

திரு. பழநியப்பனின் இறுதிச் சடங்கிலும் ஆ. தெக்கூரில் நடைபெற்ற '9 ஆவது நாள் கிரியை நிகழ்ச்சியிலும் திரு. ஏவி. எம். பழநியப்ப செட்டியார் திரு. ஏ. அருணாசலம் (முன்னாள் வருமான வரி ஆணையாளர்) திரு. ஏவி. எம். சரவணன் திரு. ஏவி. எம். குமரன் பாங்க் ஆப் மதுரையின் இயக்குனர் கீழப்பூங்குடி திரு. என். கருப்பன் செட்டியார் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

திரு. சுப. மு. பழநியப்பன் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் M. Sc. (Geology) பட்டம் பெற்றவர். இவர் தொடக்கத்தில் தொழிற் கல்விக் கூடத்தில் விரிவுரையாளராகவும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிலத்தடி நீர் மற்றும்-சுரங்கத்தில் உதவி நில இயலாளராகவும் (10 ஆண்டுகள்) பணியாற்றியுள்ளார். பின் பாண்டிச்சேரியில் 'சபரி ஸ்டார்ச்' என்கிற கிழக்கு மாவு தயாரிக்கும் நிறுவனத்தையும் 'சபரி அட்ஹேசிவ்ஸ்' என்கிற பசை தயாரிக்கும் நிறுவனத்தையும் சொந்தமாக நடத்திவந்தார்.

இவர் பாண்டிச்சேரி நகரத்தார் சங்கத்தின் செயலாளராகவும் பாண்டிச்சேரி சுழற் குழுவின் தலைவராகவும் சிறந்த தொண்டாற்றியவர். பாண்டிச்சேரி தொழிற்பேட்டையின் முன்னாள் தலைவர். பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்.



தமிழில் ஆர்வமுள்ள இவர் ''வரலாற்றுக்கு முன் வையகம்'' (அறிவியல்), ''நிலத்தடி நீர்''. (மண்ணியல்) ''வாழ்க்கை உங்கள் கையிலே'' ஆகிய நல்ல நூல்களைப் படைத்துள்ளார்.

திரு. பழனியப்பன் படத் தயாரிப்பாளர் அமரர் திரு. ஏவி. மெய்யப்ப செட்டியாரின் மாப்பிள்ளை ஆவார். இவருக்கு ருக்மணி ஆச்சி என்கிற மனைவியும் திருமதி தெய்வானை பனையப்பன் என்கிற புதல்வியும் திரு. முத்துராமன் என்கிற அய்யப்பன் M.Sc. M. Phil என்ற புதல்வரும் உள்ளனர்.

திரு. பழநியப்பனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.



மதுரை அமுதசுரபி கலை மன்றம் 18-1-92 அன்று நடத்திய பொங்கல் விழாவில் மதுரை மாநகரின் சிறந்த இளைஞருக்கான விருதையும் நினைவுப் பரிசையும் விஜயா பிரிண்டர்ஸ் திரு. ஆர். சொக்கலிங்கத்திற்கு மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு. ஆர். பாஸ்கரன் வழங்கியபோது எடுத்த படம். அருகே மன்றத்தின் தலைவர் திரு. வீ. பாலகிருஷ்ணன், செயலாளர் திரு. லூ. பாஸ்டின் பெஸ்கி.

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணம்

அனைத்து நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கம் முன்னின்று நடத்தும் கூட்டுத் திருமணம் 9-2-92 (தை மீ 26உ) ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி முதல் 8-54 மணிக்குள் பிள்ளையார்பட்டியில் நிகழவிருக்கிறது. அன்று மூன்று கூட்டுத் திருமணங்கள் நடைபெற திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். ஒ, ஆர்எம். கணபதி செட்டியார் நிர்வாகக் குழுவினர் மற்றும் முன்னுள் தலைவர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

திருச்சி நகரத்தார் சங்கம் நல்ல உள்ளத்தோடு செய்துவரும் இந்தப் புனிதமான, அவசியமான சேவையைப் பலரும் பாராட்டி வருவதோடு இந்நற் செயல்களில் ஈடுபட்டுவரும் அனைவரையும் மனித தெய்வங்களாக வணங்கிப் போற்றுகின்றனர்.

திருமணம்

இராங்கியம் திரு. மெ. மு. மெ. மெய்யப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் நாராயணன் D. E. E.க்கும் ஆவினிப்பட்டி திரு. நமு. சித. அள. சிதம்பரம் செட்டியாரின் புதல்வி செல்வி முத்தாத்தாள் M. Sc., B. Ed.க்கும் 13-12-91 அன்று ஆவினிப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ஏ.ஆர். மெய்யப்பன்

திரு. ஏ ஆர். மெய்யப்பன் குழிபிறையில் பிறந்தவர். மாத்தூர் மணலூர் பிரிவைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் திரு. எம். ஆறுமுகம் செட்டியார்; தாயார் திருமதி ஏ ஆர். இராமாயி ஆச்சி ஆவார்.

திரு. மெய்யப்பன் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பயின்று 1962ல் B. Sc. பட்டத்தையும் அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் பயின்று 1965ல் B. T. பட்டத்தையும் பெற்றார். பின் தனியாகப் படித்து 1969ல் சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து M. A. (தமிழ்) பட்டம் பெற்றார். பின் 1981ல் இமாசலப் பிரதேச பல்கலைக் கழகத்திலிருந்து M. Ed. பட்டம் பெற்றார்.

இவர் 5–6–1965 முதல் ஆசிரியர் பணியை மேற்கொண்டுள்ளார். தொடக்கத்தில் குழிபிறை எம். சிடி. ஆர்எம். உயர்நிலைப் பள்ளியிலும் பின் விழுப்புரம் காமராஜர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியிலும் கடலூர் நகராட்சி மேல் நிலைப் பளளியிலும் மீண்டும் விழுப்புரம் காமராஜர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியிலும் ஆசிரியர் பணியைச் செவ்வனே செய்துள்ளார். 14-3-81 முதல் சுமார் 8 மாதங்கள் கடலூர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியிலும் 6-2-85 முதல் 6-1-90 வரை விழுப்புரம் காமராஜர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியிலும் உதவித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

8–1–90 முதல் சிவகாசி நகராட்சி மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 16–7–90 முதல் மயிலாடுதுறை கொரநாடு கிட்டப்பா நகராட்சி மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் தன் ஆசிரியப் பணிக்கிடையே வட்ட, மாவட்ட, மாநில அளவிலான பல விஞ்ஞானப் பொருட்காட்சிகளில் கலந்து கொண்டும் நடத்தியும் இருக்கிறார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக B. Ed., M. Ed. பயிற்சி வகுப்புகளுக்கான மதிப்பீட்டாள



ராகவும் இருக்கிறார். இவர் தான் சார்ந்துள்ள பள்ளியில் கல்வியின் தேர்ச்சி விழுக்காட்டினை உயர்த்தப் பாடுபட்டு வருவதோடு பள்ளியின் தேவைகளை தனது திறமையால் நிறைவேற்றியும் வருகிறார்.

திரு. மெய்யப்பன் அன்பானவர். உயரிய எண்ணங்களைக் கொண்டவர். நல்ல பேச்சாளர். நம் சமூக முன்னேற்றம் கருதி பல சங்கங்களில் பேசியுள்ளார். முத்து பதிப்பகம் வெளியிட்டுள்ள ''எளிமைத் தமிழ் இலக்கணம்''

சபரிமலை ஸ்ரீ அய்யப்பன் கோவில் :

நிகழ்ச்சிகள் விவரம்

மாதாந்திர பூஜை	13—2—92 முதல்	17—2—92 வரை
மாதாந்திர பூஜை	14—2—92 முதல்	18—3—92 வரை
பங்குனி உத்தரம்	18—3—92	
மாதாந்திர பூஜை	10—4—92 முதல்	17—4—92 வரை
விஷு திருவிழா	14—4—92	
மாதாந்திர பூஜை	15—5—92 முதல்	18—5—92 வரை
பிரதிஷ்டை நாள்	9—6—92	
மாதாந்திர பூஜை	15—6—92 முதல்	19—6—92 வரை

என்ற நூலின் ஆசிரியர்.

திரு. மெய்யப்பன் விழுப்புரம் நகரத்தார் சங்கத்தில் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக செயலாளராகப் பணியாற்றி வருகிறார். விழுப்புரத்தில் ரூபாய் மூன்று இலட்சம் செலவில் உருவாகி வரும் நகர விடுதிக்கு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கம், மயிலாடுதுறை நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கம் ஆகியவற்றின் செயற் குழு உறுப்பினர். நம்மின மாணவ, மாணவியரின் கல்விக்கு பலவகைகளில் தேவையான உதவிகளைப் பெற்று உதவி செய்து வருகிறார்.

இவரது துணைவியார் திருமதி சிவகாமி ஆச்சி ஆவார். இவரது புதல்வர் D. M. E. முடித்து சென்னை H V F தொழிற்சாலையில் பழகுநராகப் பணியாற்றி வருகிறார். புதல்வி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் B. Sc. (Agri) பயின்று வருகிறார்.

திரு. மெய்யப்பன் மேலும் பல சிறப்புக்களைப் பெற ''நகரத்தார் குரல்'' வாழ்த்துகிறது.

— எல். சுந்தரம்

எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கும் விழா

அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாவில் மணி விழாத் தம்பதியர் மட்டுமல்ல, அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

எழுபத்தாறு வயது வந்தவர்கள் 'நமக்கு எண்பது வந்தால் எப்படி இருக்கும்? என எண்ணிப் பார்க்கிறார்கள்.

ஐம்பத்தாறு வயது வந்தவர்கள் 'நமக்கு மணிவிழா வந்தால் எப்படி இருக்கும்?' என எண்ணிப் பார்க்கிறார்கள்.

பதினாறு வயது வந்தவர்கள் 'நமக்குத் திருமணம் எப்போது?' என அக் காட்சியை மனக்கண்ணில் காண்கிறார்கள். ஆதலால் எல்லோரும் மகிழ்வாய் இருக்கும் விழா, மணி விழாவாகும்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(மேலைச்சிவபுரியில் 25-12-91 அன்று நிகழ்ந்த ஒரு மணி விழாவில்)

நகரத்தார் திருமண முறைகள்

தொகுப்பு : A. K. கிருஷ்ணன் B. Sc.

— 3 —

முதல் சீர் வைத்தல்

கல்யாணத்திற்கு முதல் நாளாகிய நாளிடும் நாளன்று முதல் சீர் வைக்கப் பெண்கள் மட்டும் பித்தளைக்குடம் 2, செம்பு 2, விளக்கு 1, ஆகியவற்றுடன் பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று வருதல். வீட்டில் தும்பு பிடிக்க வேண்டும்.

தும்பு பிடித்தல்

மணம் நிகழவிருக்கும் நடு வீட்டில் மங்கல விளக்கேற்றி எட்டுக் கயிறுகளைக் கோலக் கூட்டில் நனைத்து கோபுர உருவில் அறையின் வெளிச்சுவர் உள் வீட்டுச்சுவர், கதவு போன்றவைகளில் வரைவார்கள். இது இறைவனை அந்த நடுவீட்டில் எழுந்தருளச் செய்வதாகும்.

திருவிளக் கேற்றுதல்

திருமணம் நடைபெறுகின்ற நாளில் உள்வீட்டில் திருவிளக்கு ஏற்றி வைப்பார்கள். மணமக்கள் வாழ்வில் ஒளி பெற வேண்டும் என்பதே இதன் தத்துவம்.

பெண் வீட்டார்

மறுசீர் வைத்தல், தலைச் சீலையில் முடித்தல், வேவு இறக்குதல்.

நாளிடும் நாளன்று மாலை, தேங்காய்சட்டி - 1, சரிகைவேட்டி ஜோடி ஒன்று, சங்கிலி, கைக்கெடிகாரம், மோதிரம் எலுமிச்சம்பழம், பூச்செண்டு, சீர் வைத்த சாமான் நோட்டு ஆகியவற்றுடன் கூடிய தாம்பாளம் இரண்டு, உரிச்

செம்பு, மாமியார் சாமான் பணம் ஆகியவற்றோடு வெள்ளி விளக்கு குடம் செம்பு முதலியவற்றுடனும் பெண்கள் மறு சீர் வைக்க மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று வர வேண்டும்.

வேவு இறக்க வேண்டும். தலைச்சீலை முடிய வேண்டும். கழுத்துருவில் உள்ள திருமாங்கல்யத்தை மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுத்து அனுப்ப வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டார்

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குக் கழுத்துரு வாங்க வருவர். வரும் போது வட்டுவப்பை, வெள்ளைக் கம்பளி தேங்காய்ச் சட்டி ஆகியவற்றுடன் வருவர்.

கழுத்துருவில் உள்ள உருப்படி 31க்கு முன் கொடுத்தனுப்பிய திருமாங்கல்யம் ஒன்று தவிர பாக்கி உருப்படிகளையும் சிறு தாலி ஒன்றும் ஆக மொத்த உருப்படிகளை வட்டுவப்பையில் வைத்து மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் இருந்து வாங்கி வருவர். பெண் வீட்டார் தாலியுடன் விரளி மஞ்சள், பாக்கு மல்லிகைப்பூ வைத்துக் கொடுப்பார்கள்.

அரசாணைக்கால் (அரசன் ஆணைக்கால்) கட்டுதல்


மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் பங்காளிகள் திருமணத்திற்கு முதல் நாளிரவு மணவறைக்கு முன்னால் அரசாணைக் கால் கட்டுவர்

ஒரு மூங்கில் களியில் கிளுவை மரக்கிளை, பாலை மரக்குச்சி, மாவிலை, அரசிலை இவைகளைக் கட்டுவார்கள். ஒரு மேடையில் உள்ள பள்ளத்தில் பால்விட்டு பவளத்தைப் போட்டு இந்தக் காலை ஊன்றி வைப்பார்கள்.

அந்தக் காலத்தில் அரசன் ஆணைக்கு ஆட்பட்டு மணம் நிகழ்வதாக ஐதீகம். இன்றும் இந்த வழக்கம் மன்னோர் பின்னோராகிய நகரத்தார் திருமணங்களில் தொடர்கிறது.

கல்யாண வாயிலிலே
காவணக் காலுக்குயர்ந்த
நம்பவளக் காலதனை
நாட்டினோர்

–மகாகவி பாடுவார் முத்தப்பர்



கானாடுகாத்தான் திரு. சூ. ராம. சித. லெ. சிதம்பரம் செட்டியார் B. E. – திருமதி தெய்வானை ஆச்சியின் புதல்வன் செல்வன் மகாலிங்கம் B. Sc. க்கும் தேவகோட்டை திரு. அ. வயி. அ. வெ. தியாகராசன்செட்டியார் பேத்தியும் திரு. மோகன் செட்டியார்–திருமதி முத்தாள் ஆச்சியின் புதல்வியுமான செல்வி ராஜலெட்சுமிக்கும் 11–12-91 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்குத் தொழில் அதிபர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

பவள வணிகம் செய்த நினைவு, உடலுக்கு வலிவு தரும் பால், எளிதில் கிளைவிட்டு வளரும் கிளுவை, எல்லாப் பருவங்களிலும் உலராமல் பால் சுரக்கும் பாலைக்குச்சி மங்கலம் சேர்க்கும் மாவிலை நீள் நாள் நிலைத்திருக்கும் அரசின் இலை என்று பல கருத்துக்களை நினைவுறுத்தக்கூடிய வகையில் இந்த அரசன் ஆணைக்கால் உருவாக்கப்படும்.

மாற்றுக்கட்டுதல்

மணமேடைக்கு மேலே சலவைத் தொழிலாளி தூய துணிகளால் இன்று விதானம் கட்டிச் செல்வதைக் குறிக்கும். நீல விதானத்து நித்திலப் பூம்பந்தல் கீழ் என்று சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்ற எழில் விதானத்தை விவரிக்கிறது.

கோலஎழில் கூட்டும் கோலங்கள்

அறிவையர் அரிசி மாவினால் இடும் சித்திரக் கோலங்கள் வீடெங்கும் நிறைந்து மாணெழில் கூட்டி மனதைத் தொடும்.

திருமண நாளன்று நடக்கும் சடங்குகள்

— மணமகன் கன்னிநீர் ஆடுவார்
— மணமகளுக்கு பூரம் கழித்தல்
— கோயிலுக்குப்போய் வருவர்

பிறகு மணமகனுக்கு ஆடை அணிகளை அணிவித்து அருகில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று வணங்கி மணமகள் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். மணமகனை அழைத்து வரும் பொழுது அவனுடைய தாயார் ஒரு தாம்பாளத்தில் மணமகளுக்கு உள்ள ஆடை மாலே, கழுத்து உரு, சிறு தாலி முதலியவைகளை எடுத்து வருவார்கள். கோயிலுக்குச் சென்று வருவார்கள்.

பகவத்யானம்-காப்புக் கட்டுதல்

திருமண வாழ்வு சிறக்க இறைவனே எண்ணி வழிபடுதலே பகவத்யானம்

மணமகனுக்கு முதலிலும், மணமகளுக்குப் பிறகும் தனித் தனியே புரோகிதர் சங்கல்பம் செய்துவைத்து கணபதி பூஜை செய்வார்.

புரோகிதர் தாய் மாமனைக் கொண்டு வலது மணிக்கட்டில் ஒரு சிறு வெள்ளி நாணயத்தை சிகப்புத்துணியில் முடிந்து விரளி மஞ்சளையும் சேர்த்து கட்டிவிடச் செய்வார்.

— இருவருக்கும் அவரவர் வீடுகளில் பகவனம் என்று சொல்லப்படும் பசுவனத்தியானச் சடங்கு பஞ்சாங்கக்காரரால் செய்யப்படும்.

- மணமகன் கால் .விரல்களுக்கு மிஞ்சி அணிவிப்பார்கள்

பூரம் கழித்தல்

இது நாள் வரை இருந்த கன்னித் தன்மையை நீங்கி இல்லறத்திற்குரிய மங்கையாக மந்திரம் மூலம் ஆக்குவதாகும்.

மணப்பெண்ணை வைகறையில் நீராடச் செய்வார்கள். பிறகு சர மாலையை மணப் பெண்ணின்தாய் மணமகளின் கழுத்தில் அணிவிப்பார். வேப்பிலையை மணமகளின் உடலில் ஏழு இடங்களில் வைப்பார்கள். (தலை, இருதோள்கள் இடுப்பின் இரண்டு பக்கங்கள், இருபாதங்கள்) பிறகு ஒரு மரக்குச்சியினால் வேப்பிலையைத் தட்டி விடுவார்கள்.

புரோகிதர் விநாயகர் பூஜை, வர்ண கும்பபூஜை செய்து பூரம் கழிப்பார்.

பிறகு மணமகள் மற்றொரு முறை நீராட வேண்டும். கன்னி நீராட வேண்டும். கன்னி நீராடல் என்று முற்காலத்தில் வழங்கப் பட்ட நிகழ்ச்சி இதுவேயாகும்.

அரசாணிக்கு முன்னால் கோலம் போட்டு வைப்பார். பெண்ணுக்கு அம்மான் சம்சாரம் பூரம் கழிப்பார். (தொடரும்)

பிள்ளையார் சுழி!

அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாத பிரமமாகிய 'ஓம்' என்னும் பிரணவத்தின் தொடக்க வடிவம். அதில் உள்ள வட்ட வடிவம் சிவசக்தி பீடம். கோடு சிவலிங்கம் என்றும் சொல்லப்படும். எழுதத் தொடங்கு முன் பிள்ளையார் சுழியை எழுதுவது, எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்றதாகும்.

''இந்து மத உண்மைகள்'' நூலிலிருந்து — குரல் பி.யன்

கண்டனூரில் கலை இலக்கிய நிகழ்ச்சிகள்

கண்டனூர் அருள்மிகு செல்லாயி அம்மன் கோவில், அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் ஆகியவற்றின் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் 9-2-92 அன்று காலை நடைபெற உள்ளன.

அவற்றையொட்டி 7-2-92 வெள்ளி மாலை 6 மணிக்கு சிறுவர் கலைநிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கண்ணுடி ஓவியம் திறப்பு

8-2-92 மாலை 5 மணிக்கு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் தலைமையில் கண்டனூர் திரு. சிவ. ராம. ஆவுடையப்பனின் 'இடப ஆருடர்' கண்ணுடி ஓவியத்தை மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி திறந்து வைக்கிருர்.

நூல் வெளியீடு

அடுத்து, கவிஞர் திரு. செல்ல கணபதி எழுதிய ''மனக்கோவில் வாழும் உமையே'' என்ற நூலை மத்திய வணிகத் துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் வெளியிட காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் திரு. கா. நாகப்பன் பெற்றுக் கொள்கிருர்.

பாராட்டு

தொடர்ந்து புத்தக வெளியிட்டாளர் பழநியப்பா பிரதர்ஸ் திரு. செ. மெ. பழநியப்ப செட்டியாரைப் பாராட்டி திரு. லெ. இராமநாதன், முனைவர் திரு. தெ. ஞானசுந்தரம் முனைவர் திரு. அர. சிங்கார வடிவேலன் ஆகியோர் பேசுகிருர்கள். 'இலக்கியச் சிந்தனை' திரு. ப. லெட்சுமணன் வரவேற்புரை நிகழ்த்துகிருர்.

இலக்கியப் பேருரை

தொடர்ந்து திருமுருக கிருபானந்த வாரியார் 'பார்வதி கல்யாணம்' என்ற தலைப்பில் இலக்கியப் பேருரையாற்றுகிருர்.

பட்டி மண்டபம்

9-2-92 ஞாயிறு மாலை 5-30 மணி அளவில் 'சமுதாயச் சீர்

"7 மணி என்ருல் 8 மணி ஆகிவிடும்!"

பொதுவாக யாருமே நேரப்படி விழாக்களைத் தொடங்குவதில்லை.

இப்படித்தான் ஒரு அமைப்பு எனக்கு அழைப்பு விடுத்திருந்தது. 'மாலை 6 மணிக்கு' என்று அழைப்பிதழில் இருந்தது. நானும் மிகத் துல்லியமாக 6 மணிக்குக் கூட்டம் தொடங்கிவிடும் என்று எண்ணி கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பெற்ற இடத்திற்குச் சென்றேன். அங்கே யாரையும் காணோம். பேனர் கட்டியிருந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து மைக் செட் ஏற்பாடு செய்தார்கள். கூட்டம் ஏற்பாடு செய்த அமைப்பின் தலைவரைப் பார்த்து "6 மணி என்று சொல்லி 7 மணி ஆக்கிவிட்டீர்களே" என்றேன். அவரோ "6 மணி என்ருல்தான் 7 மணிக்காவது வருவார்கள்" என்ருர். "அப்படியானுல் 7 மணி என்று சரியான நேரத்தைப் போட வேண்டியது தானே!" என்றேன் நான். அவர் "7 மணி என்ருல் 8 மணிக்குத் தான் வருவார்கள்" என்ருர்.

ஆக ஒரு மணி நேரம், அரை மணி நேரம் தாமதமாகவே கூட்டங்கள் நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

— லேனு தமிழ்வாணன்

(மதுரையில் 12-1-92 அன்று நிகழ்ந்த அரிமா சங்கத்தின் 324-B 3 மண்டல மாநாட்டில் ஆற்றிய சிறப்புரையிலிருந்து)

திருத்தத்திற்குப் பெரிதும் பொறுப்பாளிகள் பெரியவர்களே ... இளைஞர்களே' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழவிருக்கிறது. (நடுவர் பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன்)

திரைப்பட மெல்லிசை

அன்று இரவு 9–30 மணி அளவில் சென்னை 'அபஸ்வரம்' ராம்ஜி குழுவினரின் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இரவு ஐம்பெருங் கடவுளர் (பஞ்சமூர்த்தி) செல்லாயி அம்பாள் திருவீதி உலா நிகழவிருக்கிறது.

இயற்கை எய்தினுர்

நாட்டரசன்கோட்டை திரு. வீர. சிவ. கிருஷ்ணன் செட்டியாரின் துணைவியார் திருமதி மீனுட்சி ஆச்சி அவர்கள் தமது 69 ஆவது வயதில் 29-1-92 அன்று நாட்டரசன்கோட்டையில் இயற்கை எய்தினுர்கள். இவர்களது புதல்வர் திரு. கி. சிவசுப்பிரமணியன் சிவகங்கையில் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிருர்.

குட நீராட்டு

அரண்மனை சிறுவயலில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்கோவிலில் திருக்குட நன்னீராட்டு விழா 5–2–92 புதன் கிழமை நடைபெற உள்ளது.

ஒ. சிறுவயலில் ஜெயந்தி விழா

ஒ. சிறுவயல் – தேனாற்றங் கரையில் அமைந்திருக்கும் ஆஞ்ச நேயர் கோவிலில் 4–1–92 அன்று ஆறும் ஆண்டாக ஜெயந்தி விழா நடைபெற்றது. அன்று மாலை பேராசிரியர் திரு. கு. செ. இராம சாமி ''கவிக்கு நாயகன்'' என்ற பொருளில் சொற்பொழிவு நிகழ்த் தினர். இரவு மதுரை எம். இராமச்சந்திரன் குழுவினர் பக்தி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற் றது. விழாவில் செட்டி நாடு சிமிண்ட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எல். சபாரெத்தினம் கலந்து கொண்டார். விழாத் தலைவர் திரு. கா. ப. அள. ராம. அழகப்ப செட்டியாரும், செயலாளர் திரு. அ. அழகப்பன் மற்றும் விழாக் குழுவினரும் சிறப்பான ஏற்பாடு களைச் செய்திருந்தார்கள்.

உடல் நலம் பெற . . .

ஃ பாகற்காய் சாப்பிடுவது உட லுக்கு மிகவும் நல்லது. பாகற் காயைச் சாப்பிடுவதால் வயிற்றி லுள்ள பூச்சிகள் அழிக்கப்படு கின்றன; மூலநோய் குணமா கிறது; சர்க்கரை நீரைக் கட்டுப் படுத்துகிறது.

ஃ அடிக்கடி பழச்சாறு சாப்பிடு கிறவர்களுக்குப் பல்லில் இருக் கும் எனாமல் தேய்ந்துவிடும். இதனால் பழச்சாறு சாப்பிட்ட வுடன் வாயை நன்றாகக் கொப் பளித்துச் சுத்தம் செய்துவிட வேண்டும். இப்படிச் செய்தால் பல் எனாமல் தேயாது.

பொன் மொழி

பகை, பொறாமை ஆகிய வற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பிவந்துசேர்ந்து விடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்தமுடி யாது. ஒருமுறை நீ அவற்றை இயங்கச் செய்துவிட்டால் அத னால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆகவேண்டும். இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால் அந்நினைவு தீய செயல்களைச் செய்வதிலிருந்து உன்னைத் தடுத்து நிறுத்தும்.

— விவேகானந்தர்

முடியும் என்பது
நம்பிக்கையின் தொடக்கம்
முயற்சிக்கு முன்னுரை
எழுச்சிக்கு வித்து
செயலுக்கு ஆதாரம்
வெற்றிக்கு ஊன்றுகோல்

— எம். பழநியப்பன் M. Sc.
ஆ. தெக்கூர்

வீட்டின் மதிப்பும் நூல்களின் மதிப்பும்!

என் தங்கை பத்தாண்டுகளுக்கு முன்பு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு வாங்கிய வீடு, இன்று ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புடையதாக இருக்கிறது. நான் பத்தாண்டுகளாக ரூபாய் மூன்று இலட்சத்திற்கு வாங்கியுள்ள நூல்களை இன்று மூவாயிரம் ரூபாய்க்குக்கூட யாரும் எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

— பழ. கருப்பையா

(காரைக்குடியில் 13–1–92 அன்று நடைபெற்ற சுழற்குழுக் கூட்டத்தில்)

தகவல்: என். பி. இராமசாமி

காரைக்குடி நற்பணி மன்றம்: நிர்வாகிகள் தேர்வு

காரைக்குடி நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்திற்கு புதிய ஆண்டுக்கு திரு. பி. எஸ். ஆர் எம். ஏ. இராமசாமி தலைவராகவும் திரு. எஸ்பி. திருஞானம் துணைத் தலைவராகவும் திரு. என். பி. இராமசாமி செயலாளராகவும் திரு. ஏ. நாகப்பன் துணைச் செயலாளராகவும் திரு. பி. எஸ். எஸ். இராமசாமி பொருளாளராகவும் மற்றும் பத்துப் பேர் செயற்குழு உறுப்பினராகவும் ஐந்து பேர் புத்தக வங்கிக்கும் ஏழு பேர் கட்டிடக் குழுவிற்கும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

திருத்தம்

''நகரத்தார் குரல்'' ஜனவரி'92 இதழில் 'தமிழ் நாட்டில் மஞ்சுவிரட்டு' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையை எழுதியவர் வேந்தன்பட்டி திரு. வை. முத்துராமன் ஆவார். இவரது 'இனிஷியல்' 'ஏ' எனத் தவறுதலாக அச்சாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர்

உமையாள்' அன் கோ திறப்பு விழா

மதுரை சொக்கிகுளம் பெசன்ட் தெருவில் 'உமையாள் அன் கோ' என்கிற ஷேர் புரோக்கர் நிறுவனத்தை 19–1–92 அன்று சக்கந்தி ஸ்ரீ வடிவாம்பிகை டெக்ஸ்டைல் மில்ஸ் லிட், டின் நிர்வாக இயக்குநர் திரு என். இராமசாமி செட்டியார் அவர்கள் புதுக் கணக்கு எழுதித் தொடங்கி வைத்தார்கள். திரு. சி. ஜம்புலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.


உ

சிவமயம்

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
14-5-1955

மறைவு :
24-1-1989



டாக்டர் ப. அண்ணாமலை

அருமை மகன் வானில் கலந்து
ஆகிவிட்டது ஆண்டு மூன்று
ஆயினும் அவன் நினைவகலாது இன்றும்
ஆற்றொணாத் துயருறும் எங்கட் கெல்லாம்
ஆறுதலளிக்கும் வண்ணம் அவனியில்
அவன் புகழ் ஓங்கி ஒளிர்வ தாகுக!

அ. பழனியப்பன்
பழ. விசாலாட்சி
பலவான்குடி

ஆத்தங்குடி குடநீராட்டு விழாவுக்கு பணிகள் துரிதம்

ஆத்தங்குடி நகரச் சிவன் கோவிலின் திருக்குட நன்னீ ராட்டு விழாவை வரும் வைகாசித் திங்களில் நடத்துவது என ஆத் தங்குடி நகரத்தார்கள் 27-7-91 அன்று நடைபெற்ற நகரக் கூட் டத்தில் நிறைவேற்றிய தீர்மானப் படி திருப்பணி வேலைகள் துரித மாக நடைபெற்று வருகின்றன.

திருப்பணிக் குழுவிற்கு ஆத்தங்குடி கா. அரு. கா. காடப்ப செட்டியார் அவர்கள் தலைவராகவும் நிதிக் குழுவிற்கு சித. மு. சித. சிதம்பரம் செட்டி யார் அவர்கள் தலைவராகவும் மலர்க் குழுவிற்கு சி. நா. நா. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைவராகவும் பொறுப் பேற்றுச் செயலாற்றி வருகிறுர் கள்.

திருப்பணிக் குழுவின் ஆலோ சனைக் குழுவில் தவத்திரு குன்றக் குடி அடிகளார், திரு. பெ. மு. சுப்பையா செட்டியார், திரு. மு. மெ. முத்துராமன் செட்டியார், பேராசிரியர் முனைவர் திரு. ச. மெய்யப்பன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இத்திருக்கோவிலுக்கு 1928 ஆம் ஆண்டு குட நீராட்டு விழா நடைபெற்றது. 63 ஆண்டுகளுக் குப்பின் நடைபெறவிருக்கும் குடநீராட்டு என்பதால் இத்திருப் பணியில் ஆத்தங்குடி நகரத்தார் கள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவல ரின் மாணக்கர் சிவத்திரு சொக்க

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



சென்ற 28—10—90 அன்று இயற்கை எய்திய எங்கள் அய்யா கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி

கரு. தெ. நா. ராம. தெ. தேனப்ப செட்டியார்

அவர்களை நினைவுகூர்ந்து எங்களது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

தோற்றம் :
24-2-1908
மறைவு :
28-10-1990

ராம. தேனப்பன்
ராம. கண்ணன்
(பேரன்கள்)

லிங்க ஐயா அவர்களால் 1928 ஆம் ஆண்டு பாடப்பெற்ற ஆத்தங்குடி ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் பதிகம் என்ற பாமாலை முனைவர் திரு. ஆறு. அழகப்பனின் முயற்சியால் சில மாதங்களுக்கு முன் மீண்டும் புதுப்பிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

இன்னர்வீல் சங்கம் சார்பாக வழக்காடு மன்றம்

காரைக்குடி இன்னர் வீல் சங்கத்தின் சார்பில் 14-12-91 அன்று பள்ளத்தூர் ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிட் அலுவலகத்தில் புலவர் மாமணி திரு. மா. முத்து ராமன் தலைமையில் ''சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை நிற்பவர்கள் ஆண்களா, அல்லது பெண்களா?'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. 'ஆண்களே' என்று கவிஞர் திரு. சோம. சிவப்பிரகாசமும், 'பெண்களே' என்று திருமதி உமையாள் முத்துவும் வாதாடினார்கள். 'பெண்களே சமுதாய முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை நிற்பவர்கள்' என்று புலவர் மாமணி திரு. மா. முத்து ராமன் தீர்ப்பு வழங்கினார்.

இன்னர் வீல் சங்கத் தலைவர் திருமதி நாச்சம்மை கருப்பன் செட்டி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களுக்கு திரு. ஆர்எம். அருணாசலமும், திருமதி மீனாட்சி அருணாசலமும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். செயலர் திருமதி இந்திரா நாகநாதனின் நன்றி உரைக்குப் பின் நாட்டுப் பண்ணுடன் விழா நிறைவுற்றது.

கவியரசரின் கருத்து மலர்கள்

கத்தரிச் செடி காயைத்தான் தரும். அதிலே குழம்பு வராது. கைகாட்டி வழியைத்தான் காட்டும். அதுவும் கூட வராது. தெய்வம் பாதி; திறமை பாதி. தெய்வம் வாய்ப்பைக் காட்டுகிறது; திறமை அதை இலாபகரமாக்குகிறது; அந்த வாய்ப்பு எல்லோருக்கும் எப்போது வரும்? முன்கூட்டியே தெரிந்துவிட்டால் இறைவனை நீங்கள் ஏன் நினைக்கப் போகிறீர்கள்!



ஃ ஃ ஃ

தெய்வ நம்பிக்கை நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்குமாகவே ஏற்பட்டது. விஞ்ஞான நம்பிக்கையைப் போல் ஒரு கட்டத்தில் தோல்வியுற்றாலும் மறு கட்டத்தில் வெற்றி பெறுவதுதான் தெய்வ நம்பிக்கை.

குத்திய பிறகுதான் முள் தெரிகிறது. தடுக்கிய பிறகுதான் கல் தெரிகிறது. வழுக்கிய பிறகுதான் நிலம் தெரிகிறது. உண்ட பிறகுதான் நஞ்சென்று புரிகிறது. தீமையை அனுபவித்துவிட்டால் பின் நன்மை கூடத் தீமையாய்த் தெரிகிறது. பட்டும் கெட்டும் தெரிந்து கொள்வதே மனித இனம். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசியுங்கள். ஏதாவது ஒரு விஷயத்தில் ஆத்திரம் வந்து ஒரு முடிவெடுக்கத் தோன்றினால் அதனை மறு நாளைக்கு ஒத்தி போடுங்கள். அப்போது ஆத்திரம் குறையும். அறிவு வேலை செய்யத் தொடங்கி விடும்.

ஃ ஃ ஃ

தனக்குத் தெரியாத தொழிலில் ஈடுபடக்கூடாது. நாணயம் இல்லாதவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது. தனக்காகக் கையெழுத்துப் போடும் உரிமையை எந்தப் பங்காளிக்கும் தரக் கூடாது. ஒருவனைப் பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளாமல் அவனைப் புகழ்ந்து பேசி விடக் கூடாது. பல ஆண்டு காலம் நம்பிக்கையாக இருந்தவனைத் திடீரென்று சந்தேகிக்கக்கூடாது.

குட நீராட்டு விழா

இராயவரம் நகரப் பிள்ளையார் கோவில் ஸ்ரீ சித்தி விநாயகருக்கும் அருள்மிகு முத்துமாரியம்பிகைக்கும் பாலமாகணபதிக்கும் 9-2-92 ஞாயிறன்று காலை 8-00 மணிக்கு மேல் 8-50 மணிக்குள் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

நகரத்தார் குரல்

அச்சுத்தாள் விலையேற்றம், அச்சுக் கூலி உயர்வு மற்றும் அதிகரித்து வரும் நிர்வாகச் செலவு ஆகியவற்றின் காரணமாக "நகரத்தார் குர"லின் உறுப்பினர் கட்டணம், டெபாசிட் சந்தா, விளம்பரக் கட்டணம் ஆகியவற்றை உயர்த்தியே ஆக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

1—1—1992 முதல் அமலுக்கு வந்துள்ள கட்டண உயர்வுகளை உறுப்பினர்களும் விளம்பரதாரர்களும் பொறுத்துக் கொண்டு தங்களது தொடர்ந்த நல்லாதரவை அளிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ. 30—00
டெபாசிட் சந்தா	ரூ. 300—00
வெளிநாடு (ஓர் ஆண்டுக்கு வான ஊர்த்தி அஞ்சல் கட்டணம் உள்பட)	ரூ. 200—00

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ. 500—00
அட்டை (உள் பக்கம்)	ரூ. 300—00
முழுப் பக்கம்	ரூ. 200—00
அரைப் பக்கம்	ரூ. 100—00
கால் பக்கம்	ரூ. 50—00

(அட்டையைத் தவிர மற்ற மூன்று வகை விளம்பரக் கட்டணங்களும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக சிறிது உயர்த்தப் பெற்றுள்ளது.)

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் முக்கால் கட்டணத்தில் வெளியிடப் பெறும்.

மணி விழா, திருமணம் போன்ற செய்திகளை ஒளிப் படத்துடன் வெளியிடக் கட்டணம் (அரைப் பக்கம் அளவு) ரூ. 100-00